செ. வெ. எண் : 920 நாள் 03.12.09

செய்தி வெளியீடு– 3.12.2009

**செங்கல்பட்டில் உள்ள மருத்துவக் கல்லூரி பயிற்சி செவிலியர் விடுதியில் பாம்பு கடித்து இறந்த மாணவியின் குடும்பத்துக்கு 1 இலட்சம் ரூபாய் நிவாரண நிதி!**

**முதலமைச்சர் கலைஞர் ஆணை!**

மதுரை மாவட்டம் மேலூரை அடுத்துள்ள கீழவளவு கொங்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளிகள் அழகு, மூக்கம்மாள் தம்பதியர். இவர்களது மகள் சந்திரகலா, செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியின் செவிலியர் பயிற்சியில் கடந்த ஆண்டு முதல் படித்து வருகிறார். மாணவி சந்திரகலா அங்குள்ள பயிற்சி செவிலியருக்கான விடுதியில் தங்கியிருந்தபொழுது, கடந்த ஞாயிறு அன்று பாம்பு கடித்து உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளித்தும் பயனின்றி நேற்று (2.12.2009) இறந்துள்ளார். இது குறித்த தகவல் கிடைத்ததும் மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்த மாணவியின் பெற்றோர்க்கும் குடும்பத்தார்க்கும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளதுடன் அம்மாணவியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 1 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கிடவும் இன்று (3.12.2009) ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9